செ.வெ.எண்: 692 நாள்: 24.10.2020

**மாமன்னன் ராஜராஜ சோழன் 1035-வது சதய விழா முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

தஞ்சாவூர் மாவட்டம், மாமன்னன் ராஜராஜ சோழன் 1035-வது சதய விழா முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(24.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாமன்னன் ராஜராஜசோழனின் 1035-வது ஆண்டு சதய விழா வருகின்ற 26.10.2020 அன்று நடைபெற உள்ளது. அன்றைய தினம் காலை 6 மணிக்கு மங்கள இசை, காலை 6.30 மணிக்கு திருக்கோயில் பணியாளர்களுக்கு புத்தாடை வழங்குதல், காலை 7 மணிக்கு மாமன்னன் ராஜராஜசோழன் சிலைக்கு மாலை அணிவித்தல், காலை 9.15 மணிக்கு அருள்மிகு பெருவுடையார், பெரியநாயகி அம்மன் திருமேனிகளுக்கு பேரபிஷேகம் செய்தல், மதியம் 1 மணிக்கு அருள்மிகு பெருவுடையார், பெரியநாயகி திருமேனிகளுக்கு பெருந்தீப வழிபாடு செய்தல், இரவு 8 மணிக்கு மேல் திருக்கோயில் வளாகத்தின் உள்பிரகாரத்தில் சுவாமி புறப்பாடு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். கொரோனா நோய்த்தொற்று காரணமாக சுவாமி திருவீதி உலா நான்கு ராஜ வீதிகளான மேலவீதி, வடக்கு வீதி, கீழ வீதி மற்றும் தெற்கு வீதிகளில் நடைபெறாது. சதய விழா நிகழ்ச்சிகளில் கொரோனா நோய்த்தொற்று நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும். கொரோனா நிலையான வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சதய விழாவில் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

சதய விழாவுக்காக அமைக்கப்பட்டுள்ள தடுப்பு வேலிகள், பக்தர்கள் வரிசையாக நடந்து செல்ல ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள நடைபாதைகள், சமூக இடைவெளி கடைபிடிப்பதற்கான குறியீடுகள், தெர்மல் ஸ்கேனர் மூலம் பரிசோதனை செய்யப்படும் இடங்கள், கை சுத்திகரிப்பான் வழங்கப்படும் இடங்கள் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வெளி மற்றும் உட்புறங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள குடிநீர் வசதி ஆகிய இடங்களை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் காலணிகள் வைக்கும் இடத்தை வெளியில் அமைத்திட அறிவுறுத்தினார். தொடர்ந்து, பெரியகோவிலின் எதிர்ப்புறம், அருகிலுள்ள காவல்துறை இடம் மற்றும் திலகர் திடலில் அமைக்கப்பட்டுள்ள வாகனம் நிறுத்தும் இடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டார். பின்னர், ராஜராஜன் சிலையை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கு செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

இவ்வாய்வின் போது, சதய விழாக்குழு தலைவர் திரு.துரை.திருஞானம், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் திருமதி. ஜானகி ரவீந்திரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன், தஞ்சாவூர் வருவாய் கோட்ட அலுவலர்(பொ) திருமதி.மோகனா, மத்திய தொல்லியல் துறை அலுவலர் திரு.சங்கர், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு.கிருஷ்ணன், தஞ்சாவூர் வட்டாட்சியர் திரு.வெங்கடேஸ்வரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.